


தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி இராயபுரம் அறிவகத்தில் 'திராவிடம் சாதித்தது என்ன ..?' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை வகித்தார். சட்டத்துறை துணை செயலாளர் வழக்கறிஞர் என் மருது கணேஷ் வரவேற்புரையாற்றினர். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார், இக்கருத்தரங்கை தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

### மக்கள் நலனில் அக்கறை கொண்டு – தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றி

# வரலாற்றுச் சாதனை படைத்த தி.மு.கழகத்தை வீழ்த்த எந்த சக்தியாலும் முடியாது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேச்சு!

சென்னை, டிச.11-

தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், துணை முதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி இராயபுரம் அறிவகத்தில் 'திராவிடம் சாதித்தது என்ன..?' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு சட்டத்துறை செயலாளர், மூத்தவழக்கறிஞர், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை வகித்தார் சட்டத்துறை துணை செயலாளர் வழக்கறிஞர் என் மருது கணேஷ் வரவேற்புரையாற்றினர். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏமுன்னிலைவகித்தார், இக்கருத்தரங்கை திமுக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி துவக்கி வைத்து சிறப்புரைஆற்றினார்.அவர் பேசியதாவது..

தி.மு.க.சட்டத்துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கருத்தரங்கை உளப்பூர்வமாக பாராட்டுகிறேன் . குறிப்பாக தி.மு.க. சட்டத்துறை செயலாளராக என் ஆர் இளங்கோ அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகு இது போன்ற உணர்வுபூர்வமான கருத்தரங்குகளை நடத்தி வருகிறார் . இன்றைக்கு திமுக கழகம் தொடங்கப்பட்ட வட சென்னை பகுதியிலே, திமுகழகத்தின் முதல் அலுவலகமாக செயல்பட்ட அறிவகத்தில் , இந்த கருத்தரங்கை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளதிமுகழகசட்டத்துறையின் துணை செயலாளர் என் மருது கணேஷை நான் பாராட்டுகிறேன்.

தி.மு.கழகத்தின்சாதனைகளைஎடுத்துச்சொல்லஇது போன்ற கருத்தரங்குகள் தொடர்ந்து, மாவட்ட அளவிலே தி.மு.க சட்டத்துறையின் சார்பில் நடத்திட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான்அமைப்புச்செயலாளராக11ஆண்டுகாலம்பணியாற்றினாலும் , சட்டத் துறை மீது உள்ள பற்றும்,' பாசமும் , சிறிதளவு கூட குறைந்தது கிடையாது . ஏனென்றால் இந்த சட்டத் துறை தான் கழகத் தோழர்களை காப்பாற்றுகிற துறை.

இங்கேநமதுமருதுகணேசன் குறிப்பிட்டதை போல, நமது தலைவர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்றுசொன்னால்,அதனை போராடி பெற்றுத் தந்த துறைதி.மு.க.சட்டத்துறை.

சாதாரணமாக உச்ச நீதி மன்றம் யாரையும் பாராட்டாது, ஆனால் நம்மை, முரசொலிநிர்வாகத்தை, அதன் சார்பாகவழக்குதொடர்ந்த என்னைமிகசிறப்பாக, உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் பாராட்டியுள்ளார்கள் என்றால் அதுதான் தி.மு.க. சட்டத்துறைக்கு கிடைத்த பெருமையாகும்.

1949 இல் தொடங்கப்பட்ட தி.மு.க. 75ஆண்டுகள் கழித்தும்அதேவீரியத்துடன் கம்பீரமாக நிற்பதற்கு காரணம் உணர்வு பூர்வமான தொண்டர்களை பெற்றிருப்பதும், ஒவ்வொருமுறை இந்த தமிழகத்தை ஆட்சி புரிந்த போதும், மக்கள் நலனில் அக்கறை கொண்டு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு திட்டங்களைகொண்டுவந்துஅதன் மூலம்மக்களைப்பயனடையச் செய்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பணியாற்றியதுதான் காரணம்.

**சாதனைகளை மக்களிடம் சேர்ப்போம்!**

திமுக கழகம் செய்த சாதனைகள்போல்இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், யாரும்செய்ததுகிடையாது.

நாம்செய்யும் ஒரேதப்பு, நாம செய்த சாதனைகளை மக்களிடம்கொண்டுசேர்ப்பதில்லை. அதனால்தான் இன்றுயார்யாரோபுதிதாக கட்சி ஆரம்பிப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்வரலாற்றைதெரியாதவர்கள், ஏதேதோ உளறுகிறார்கள், சவால் விடுகிறார்கள் . ஆனால் ஒன்று மட்டும்நிச்சயம், திமுகவை எதிர்த்தவர்கள்மண்ணோடு மண்ணாகபோய்விடுகிறார்கள், நான் யாருக்கும் சாபம் கொடுக்கவில்லை. கடந்த கால வரலாறுகளை தான் சொல்கிறேன்.

புது துடைப்பம் கொஞ்சம்வேகமாதான்பெருக்கும் . ஆனால் நாளாக நாளாக அது தேய்ந்துவிடும் . நேற்று ஒருவர்பேசும்போது சொல்கிறார். தமிழ்நாட்டில் மன்னர்ஆட்சி நடக்கிறது என்று , நான் ஒன்றை இங்கு விளக்கமாக கூறுகிறேன், ஏனென்றால் இது சட்டத்துறையின் கருத்தரங்கு, தி.மு.க.விற்கு இருக்கிறபெருமையே, விடுதலை, என் ஆர் இளங்கோ, வில்சன் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட மூத்த வழக்கறிஞர்களை கொண்ட சட்டதுறையை கொண்ட ஒரே இயக்கம் தி.மு.க. என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

**அடிப்படை தெரியாதவர்கள்!**

அரசியல்சட்டப்படி, ஒருவர் தேர்தலில் நின்று, அவருக்கு 18 வயதுக்கு மேற்பட்டோர் வாக்களித்து , அதன்மூலம்வெற்றிபெற்று, மெஜாரிட்டி இடங்களை பிடிக்கின்ற கட்சிதான் ஆட்சி அமைக்கும் என்பது சட்டம் . இந்த அடிப்படை கூடத் தெரியாத சில முட்டாள்களெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தான் இன்றைக்கு தமிழ் நாட்டை ஆளுகின்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆனாலும் சரி , துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்ஆனாலும்சரி மக்கள் மத்தியில் அமோக ஆதரவை பெற்று அதன் மூலம் வெற்றிபெற்று, இன்றைக்கு அந்த பொறுப்பில் உள்ளார்கள்.

இன்றைக்குஒருசிலருக்கு இருக்கிற வயிற்றெரிச்சல் என்னவென்றால் , திராவிடம், திராவிடம்என்றசொல் எங்கு பார்த்தாலும் ஒளிப்பதை அவர்களால்ஜீரணிக்க முடியவில்லை , அதனால் தான் வாய்க்கு வந்தபடியே உளறிக் கொட்டி தீர்க்கிறார்கள். இன்றைக்கு புதிதாக கட்சி ஆரம்பித்து இருக்கின்ற ஒருவர் எந்தக் கொள்கையோடும் கட்சி ஆரம்பிக்கவில்லை, சினிமா தொழில்தகராறுகாரணமாகத்தான் கட்சி ஆரம்பித்து உள்ளார் , சினிமாவில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாக, கட்சி துவங்கியுள்ளாரே தவிர மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் அவருக்கு இல்லை.

**தொடர்ந்து பணியாற்றும்!**

அரசியலை தொழிலாக கருதுபவர்கள் மத்தியில் , திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காக பணியாற்றுகின்ற இயக்கமாக கடந்த 75 ஆண்டு காலமாக தொடர்ந்துசெயலாற்றிவருகிறது . இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து பணியாற்றும் வரலாற்றுச் சாதனை படைத்து வரும் தி.மு.க.வை அழிக்க எந்த கொம்பனாலும் முடியாது, அப்படிஅழிக்கநினைத்தால் அவர்கள் தான் அழிந்து போவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கருத்தரங்கில்திட்டக் குழுவின்துணைத்தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், சமூக நீதி கண்காணிப்புக் குழு தலைவர் சுப.வீரபாண்டியன், தி.மு.க.மாநில மாணவர்அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன்எம்.எல்.ஏ.

இளையதலைமுறைபேச்சாளர் நா.அருண், சட்டத் துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா. விடுதலை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், ஐட்ரீம்ஸ் ஆர். மூர்த்தி ஜே.ஜே. எபிநேசர்உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### குடியாத்தம் கழக முன்னோடி

# மா.உதயசூரியன் படத்திறப்பு!

## அமுலு விஜயன் எம்.எல்.ஏ. – எஸ். சௌந்தரராசன் பங்கேற்பு!

குடியாத்தம், டிச. 11-

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரம் கெங்கையம்மன் கோயில் வார்டின் கழகப்பிரதிநிதியும், குடியாத்தம் நகர வீட்டுவசதி சங்க செயலாளருமான மா.உதயன்(எ) உதய சூரியன் பட திறப்பு நிகழ்வு நகர கழக செயலாளர்நகரமன்றதலைவர்எஸ். சவுந்தரராசன் தலைமை தாங்க, நகரகழகநிர்வாகிகள் கவிஞர் த. பாரி, க.கோ. நெடுஞ்செழியன். ஜம்புலிங்கம், வசந்தா, ஆறுமுகம், தண்டபாணி, முன்னாள் நகர செயலாளர்எஸ்.நடராஜன், ஆசிரியர்மா.கண்ணபிரான் ஆகியோர் முன்னிலை வகிக்க நடைபெற்றது.

குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. அமலு விஜயன் மறைந்த, மா.உதயன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசினார்.

குடியாத்தம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அன்பரசன், திராவிடர் கழக மண்டல பொறுப்பாளர் எஸ். சடகோபன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின்துணைசெயலாளர் கே.வி.குப்பம் சி.கோபி, வேலூர் மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் சா.பரிமளம், வி. ஏ அன்பு, பூமாலை வாசு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் த. புவியரசி, மொழிமாறன், அரிகிருஷ்ணன், கலை நேசன், மற்றும் நகர, ஒன்றியஇலக்கியஅணி நிர்வாகிகள், முத்துகுமார், முகிலன், ஐ.தூயவன், பஞ்சாட்சரம், பூபதி, சத்திய மூர்த்தி, வெங்கடேசன், மாதவன், அசோகன், விஜயலட்சுமி, வனிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கானஏற்பாடுகளை நகர, ஒன்றிய, தி.மு.க. இலக்கிய அணியினர் செய்திருந்தனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு தலைமை செயற்குழு உறுப்பினர் மு.பேச்சிபாண்டியன் ஏற்பாட்டில் பிளாரன்ஸ் சுவைன்சன் காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர் பள்ளியில் மதிய உணவு வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று உணவு வழங்கினார்.நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், கிரிஜா குமார், பேரூர் கழக செயலாளர் பேச்சு குட்டி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், அணி அமைப்பாளர்கள் தொப்பி மைதீன், அருள் இளங்கோ, அனிதா,மகளிர் அணி தலைவர் ரேவதி அசோக்,வர்த்தக அணி துணைதலைவர் முத்துப்பாண்டி, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாலதி கண்ணன், மாவட்ட பிரதி கார்டன் சேகர்,சங்கர்நகர் மற்றும் நாரணம்மாள்புரம் நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள் விஷ்ணு,முருகன், தங்கராஜ்,உள்பட காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர் பள்ளியின் இந்நாள் முன்னாள்,மாணவ,மாணவிகள் ஆசிரியப் பெருமக்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தலைவர் கலைஞருடன் நெருக்கமான நட்புறவை கொண்டிருந்தவர்!

# இந்திய அரசியலில் உறுதியும் தொலைநோக்கும் மிகுந்த தலைவராக விளங்கியவர்!

## கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, டிச. 11 -**

**கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா அவர்கள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இந்திய அரசியலில் உறுதியும் தொலைநோக்கும் மிகுந்த தலைவராக விளங்கியவர். அவரது பெரும் பங்களிப்பு களுக்காக அடுத்து வரும் பல தலைமுறைகளுக்கு அவர் நினைவு கூறப்படுவார் என்றும் தலைவர் கலைஞர் அவர்களுடன் நெருக்கமான நட்புறவை கொண்டிருந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

கர்நாடக முன்னாள் முதலமைச்சரும், ஒன்றிய முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருமான எஸ்.எம். கிருஷ்ணா அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:



இந்திய அரசியலில் உறுதியும் தொலைநோக்கும் மிகுந்த தலைவரான எஸ்.எம்.கிருஷ்ணா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

கர்நாடகத்தின் முதலமைச்சராக திரு. கிருஷ்ணா அம்மாநிலத்தைக் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப் பாதையில் செலுத்தினார். இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சராக உலகளவில் நம் நாட்டின் நிலையை தனது தலைமைத்துவத்தாலும் சாமர்த்தியத்தாலும் அவர் வலுப்படுத்தினார்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் 1960களின் இறுதிப்பகுதியில் இருந்தே ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மரியாதை, மாநிலக் கூட்டுறவு பற்றிய ஒருமித்த பார்வை, முற்போக்கான ஆட்சிமுறை ஆகியவற்றின் வழியே நெருக்கமான நட்புறவை அவர் கொண்டிருந்தார் என்பதையும் நினைவுகூர்கிறேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கர்நாடகத்தில் உள்ள அவரது தொண்டர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பெரும் பங்களிப்புகளுக்காக அடுத்து வரும் பல தலைமுறைகளுக்கு அவர் நினைவு கூரப்படுவார்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஒரு இலட்சம் கால்நடைகளுக்கு ஒரு

# நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி!

## பேரவையில் கேள்வி நேரத்தில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தகவல்!

சென்னை, டிச.11-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஒரு இலட்சம் கால் நடைகளுக்கு ஒரு 'நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி' வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அனிதா இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விவாதம் வருமாறு:-

அ.சௌந்தரபாண்டியன்: லால்குடி தொகுதி, தச்சன் குறிச்சி ஊராட்சியில் கால் நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர்அனிதாஆர். ராதாகிருஷ்ணன் :** நடைமுறையிலுள்ளஅரசுவரைமுறைகளின்படி, லால்குடி தொகுதி, தச்சன்குறிச்சிஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**அ. சௌந்தரபாண்டியன்:** கடந்த முறையும் இதே போன்று பெருவளநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அவர்கள், கால்நடைகளின் எண்ணிக்கையும், தூரத்தையும் கணக்கிட்டு, வாய்ப்புகள்இல்லையென்று கூறினார்கள். எனவே, இதைமுதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று கால்நடைகளினுடைய எண்ணிக்கைக்கும், தூரத்திற்கும் தளர்வு செய்து, இந்தக் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?



**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** பல்வேறு தரப்பினரிடமிருந்து, பல்வேறு இடங்களில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும், கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று ஏறக்குறைய 800 கோரிக்கைகள்வந்திருக்கின்றன. தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கின்றன. அந்த வகையில், முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொன்னாலும் கூட, முதலமைச்சர், அவர்கள் 20.8.2024 அன்று நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி சேவையைத் தொடங்கி வைத்திருக்கிறார். கால்நடைமருந்தகத்திலிருந்து தொலைதூரத்திலுள்ள கால்நடைகளுக்கும் அனைத்து மருத்துவ சிகிச்சைகள்மற்றும்இதரசேவைகளை வழங்குவதற்காக அந்த சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம்கால்நடைகளுக்கு ஒரு நடமாடும் கால்நடை மருத்துவஊர்திஎன245நடமாடும்கால்நடை மருத்துவ ஊர்திகள் தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது200நடமாடும்கால்நடை மருத்துவ ஊர்திகள்பயன்பாட்டிலுள்ளன. எனவே, அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ. சௌந்தரபாண்டியன்:** கருவுற்ற தாய்மார்களை செவிலியர்கள்மூலம்கண்டறிந்து, குழந்தையைப் பெற்றெடுத்தபின்னர், அவர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/மருத்துவமனைகளில் தடுப்பூசிகள், தடுப்புமருந்துகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று, மாடுகள்கன்றுகளை ஈன்ற பின்னர், அவை குறித்த விவரங்களை மருத்துவமனைகளில் பதிவு செய்ய வேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம், சில நேரங்களில், பிறந்த கன்றுகள் அம்மை நோயினால்பாதிக்கப்பட்டு, உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. எனவே, அத்தகையகன்றுகளுக்குஅரசின்மூலம் தடுப்பூசி வழங்க அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இத்தகைய நிலைகளையெல்லாம்அறிந்தமுதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கால்நடைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தில்தான், தற்போதுநடமாடும்கால்நடை மருத்துவ ஊர்தி சேவையைத் தொடங்கி வைத்துள்ளார்கள். எந்தெந்தப் பகுதிகளுக்கு அடிப்படைத் தேவைகள் இருக்கின்றனவோ, அந்தந்தப் பகுதிகளில் அவற்றைப் பயன்படுத்துகின்ற வகையில் 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தார்.

அவற்றில், 200பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியானது, ஒரு நாளைக்கு2பஞ்சாயத்துகள் வீதம், கால்நடைகளுக்கான மருத்துவ சேவைகளை தொடர்ந்து வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, உறுப்பினர் சொல்கின்ற இடங்களிலும், குறிப்பாக அவர் கோரியுள்ள இடங்களிலும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுவிவாதம்நடைபெற்றது.

### வேலூர் தொகுதியில்

# உணவுப் பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்திடுக!

## மக்களவையில் கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.11-

தமிழ்நாட்டில்குறிப்பாக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உணவுப் பதப்படுத்தும் தொழில்களை (FPI) மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஒன்றியஅரசுஎடுத்துள்ளஆக்கப்பூர்வமானநடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் தமிழ்நாட்டில்குறிப்பாகவேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்உணவுப்பதப்படுத்தும் தொழில்களை (FPI) மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும்ஒன்றியஅரசுஏதேனும்சிறப்புத்திட்டங்களை முன்மொழிந்துள்ளதா?என்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு ஆதரவாக பழக் கூழ் சேமிப்பு மற்றும் பேக்கேஜ் தொழில்களை நிறுவுவதற்கு ஒன்றிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பயனுள்ளநடவடிக்கைகள் என்ன? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்துறைக்கான ராஜாங்க அமைச்சர் ரவ்னீத் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்:



தமிழகத்தின் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி உட்பட நாட்டில் உணவு பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகம் (MoFPI)மத்தியத்துறைத்திட்டங்களான பிரதான் மந்திரி கிசான் SAMPADA யோஜனா மூலம்உணவுபதப்படுத்தும் தொழில்களை அமைப்பதற்கு ஊக்கமளித்து வருகிறது.

PMKSY, உணவுபதப்படுத்தும் தொழிலுக்கான உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டம் (PLISFPI) மற்றும் மத்திய நிதியுதவியுடன் கூடிய மைக்ரோ ஃபுட் பிராசசிங் எண்டர்பிரைசஸ்(PMFME)திட்டத்தை முறைப்படுத்துதல்போன்ற இந்தத் திட்டங்கள் பிராந்தியம் அல்லது மாநிலம் சார்ந்தவைஅல்ல, ஆனால்தேவை சார்ந்தவை. அந்தந்த திட்ட வழிகாட்டுதல்களின் படி பழக் கூழ், ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி (Integrated Cold Chain) போன்ற பல்வேறு வகையான உணவு பதப்படுத்தும் தொழில்களை அமைப்பதற்காகவருங்கால தொழில் முனைவோருக்கு ஒன்றிய அரசின் உணவுப் பதப்படுத்துதல்அமைச்சகம் நிதியுதவி அளிக்கிறது.

PMKSYஇன்துணைத்திட்டங்களின் கீழ், MoFPI 15வது நிதிக்கமிஷன்சுழற்சிக்கான மொத்த செலவீனமான ரூ.5520 கோடியுடன் தொழில் முனைவோருக்கு பெரும்பாலும் கடன் இணைக்கப்பட்ட நிதி உதவியை (மூலதன மானியம்) வழங்குகிறது. MoFPI1 மெகா உணவுப்பூங்கா, 23குளிர்சங்கிலித் திட்டங்கள், 12 வேளாண் பதப்படுத்துதல் கிளஸ்டர்கள், 35 உணவுப் பதப்படுத்துதல்அலகுகள், 9 பின்தங்கிய மற்றும் முன்னோக்கி இணைப்புத் திட்டங்களை உருவாக்குதல் & 4 செயல்பாட்டு பசுமைத் திட்டங்கள் ஆகியவற்றை PMKSYஇன்தொடர்புடைய திட்டங்களின் கீழ் அக்டோபர்31,2024.வரை அனுமதித்துள்ளது.

MoFPI அமைப்பதற்கான நிதி, தொழில்நுட்ப மற்றும் வணிக ஆதரவையும் வழங்குகிறது/PMFMEதிட்டத்தின் கீழ்மைக்ரோஉணவுபதப்படுத்தும் நிறுவனங்களை மேம்படுத்துதல். இத்திட்டம் 202021 முதல் 202526 வரை செயல்பாட்டில் உள்ளது. இதன்மொத்தச்செலவு ரூ. 10,000 கோடி ஆகும்.

வேலூர் மாவட்டத்தில் 187 மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 13,520மைக்ரோஉணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி வரை PMFMEஇன்கீழ் கடன் இணைக்கப்பட்டஉதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விதை மூலதன உதவியாக ரூ. வேலூர் மாவட்டத்தில் 959 சுய உதவிக்குழுஉறுப்பினர்களுக்கு 3.7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

PLISFPI என்பது உலகளாவிய உணவு உற்பத்தி சாம்பியன்களை உருவாக்குவதை ஆதரிப்பதற்கும்> சர்வதேச சந்தையில் இந்திய உணவுப் பொருட்களின் பிராண்டுகளைஆதரிப்பதற்கும்நோக்கமாகஉள்ளது. இத்திட்டம் 202122 முதல் 202627 வரையிலான ஆறு வருட காலப்பகுதியில் ரூ. 10,900 கோடி ஒதுக்கீட்டுடன்செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ் நாட்டில் ரூ 447.27 கோடி ரூபாய் முதலீட்டில் 20இடங்களில்உணவுபதப்படுத்தும் திட்டங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இது வரை ஊக்கத்தொகை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனதுபதிலில்கூறியுள்ளார்.